# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2101/21 - 2018 දෙසැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.12.12

*2101/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KDS/PDB/4/3/2/6.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2014/WS/144.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகம்பஹ கோரல சிறு பிரிவில், பரணகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்திற்குப் பதிலாக சிரேஷ்ட நில அளவைகள் அதிகாரி மூலமாக அளவிடப்பட்ட, Maha/6776 ஆம் இலக்கமுடைய அடிப்படை வரைபடத்தில் 0.0625 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் :

*1.* **துண்டு இல. *01* - காணியின் பெயர் : போகஹமுதுனே வத்த என்கிற நய்தாகே ஹேன என்கிற ஜம்புகொல்ல வத்த ; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : ஆர். எம். பிரனித் பிரியங்க, இல. 33, தம்பகஹமுதுன, ஜம்புகஹபிடிய; விஸ்தீரணம் : 0.0625 ஹெக்டயார்.**

**எல்லைகள்**

வடக்கு : ஆரம்ப வரைபட இல. *3176* இனுடைய காணித் துண்டு இல. S *469*, E *468*, D *468* ; கிழக்கு : ஆரம்ப வரைபட இல. *3176* இனுடைய காணித் துண்டு இல. D *468*, E *468*, T *469* ; தெற்கு : ஆரம்ப வரைபட இல. *3176* இனுடைய காணித் துண்டு இல. T *469*, S *469* ; மேற்கு : ஆரம்ப வரைபட இல. *3176* இனுடைய காணித் துண்டு இல. S *469*.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பாத்ததும்பரை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஜீ. சீ. ஜயதுங்க,
பிரதேச செயலாளர்,
பாத்ததும்பரை.

பிரதேச செயலகம்,
பாத்ததும்பரை,
2018, திசெம்பர் 08.

*12 - 784*


1A - G 29076 - 17 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*